ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆகவே, விரைவிலே லிப்ட் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்ற ஆலோசனைகளும் பரிசீலிக்கப்படும் முடிந்தால் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், பிரசவத்திலே அக்கறை இருக்கிறவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டிலும் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும், அதுபற்றியும் கேள்வியாவது கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி ஆரம்ப சுகாதார நிலையம்

*316 வினா.—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதியை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

மதுரை மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும் வல்லுநர்கள்

*317 வினா—திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசாங்க மருத்துவ மனைக் கல்லூரியில் ஓய்வு பெற்ற பின்பு, பதவி நீட்டிப்பு கொடுக்கப்பட்டுள்ள டாக்டர்கள் எவரேனும் உள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட இரண்டு மருத்துவ வல்லுநர்கள் ஓய்வு (Retirement) பெற்றபின் மறுபடியும் வேலையில் (Re-employment) நீடிக்கப் பட்டுள்ளார்கள்.

(1) டாக்டர் எஸ். ஏ. கபீர், டீன், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

(2) டாக்டர் ஏ. ஏ. ஆசீர்வாதம், அறுவை சிகிச்சை இயல் பேராசிரியர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, மருத்துவத்தில், இந்த ஓய்வு பெற்றபின் காலம் நீட்டிப்பதைப்பற்றி அரசாங்கம் கொள்கை அளவிலே கொள்கை வகுத்திருக்கிறதா, அப்படி என்றால் அது எந்த ஆண்டிலிருந்து அமல் நடத்தப்படுகிறது, அல்லது அமல் நடத்தப்படும் என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பொதுவாக 55-வது வயதில் அவர்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்பிலிருந்து விலகவேண்டுமென்பது கொள்கை. ஆனால், சில துறைகளில் தகுதி வாய்ந்த பேராசிரியர்களாகவும் மற்றவர்களைப் பயிற்றுவிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாகவும், உயர்தரப் பட்டம், அதனோடு நீண்ட கால அனுபவம் பெற்றவர்களாகவும் இல்லையென்று சொன்னால் தரம் குறையும் என்பதால் அந்தத் துறையினுடைய தலைமைப் பொறுப்பை அந்தந்தக் கல்லூரிக்காக ஓராண்டு, ஈராண்டு, தேவைக்கேற்ப அவர்களுக்குப் பதவிக் காலம் நீடிக்கலாம்.

இரண்டாவதாக, கல்லூரியினுடைய நிர்வாகப் பொறுப்பிற்கு வருவதற்குப் பெரும்பாலும் உயர்தரத் தகுதி பெற்றவர்கள் முன்வருவதில்லை. டீன் பொறுப்பு, இயக்குநர் பொறுப்பு ஆகிய பொறுப்புகளில் மிகச் சிறந்த அளவு தேர்ச்சி பெற்றவர்கள், வருவாய் உள்ளவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட பொறுப்புக்கும் நீடிக்கப் படுகிறது. இது நிர்வாக நன்மையையும் கல்லூரி நன்மையையும் முன்னிட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

திரு. ஏ. சுவாமிதாஸ் : மதுரையிலே இரண்டு நிபுணர்களுக்குப் பதவிக் காலம் நீட்டித்துக் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். டாக்டர் கபீர் என்பவரும், டாக்டர் ஆசிர்வாதம் என்பவரும் எந்த எந்தத் துறையிலே அதிக அனுபவமும் திறமையும் உடையவர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : டாக்டர் கபீர் டீன் ஆக இருக்கிறார். டீன் என்று சொன்னால் அவர்தான் அந்தக் கல்லூரியினுடைய முழுப் பொறுப்பையும் ஏற்றுகொண்டிருக்கிறவர். சூப்பிரண்டெண்ட்டெண்ட், பிரின்ஸ்பால் ஆகிய பதவிகள் மட்டுமல்லாமல் எல்லாப் பொறுப்புகளையும் அவர் கவனித்து வருகிறார். ஆனால் பாடம் நடத்துகிற உரிமை இல்லை. அவருக்கு 13—11—1970 முதல் ஒவ்வொரு ஆண்டாக மூன்று ஆண்டுக்காலம் 13—11—1973 வரையில் தனித்தனியாகப் பதவி நீட்டிப்புக் கொடுக்கப்பட்டு

இருக்கிறது. டாக்டர் ஆசிர்வாதம் என்பவர் அறுவைச் சிகிச்சை இயலில் பேராசிரியராக இருக்கின்றார். பொதுவாக அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் அவருக்கு மாற்றாக வரக்கூடியவர்கள் இருந்தாலும் இந்த ஆண்டு முடிய அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு அவரது சேவை தேவை என்று குறிப்பிடப் பட்டு, இடைக்காலத்திற்காக 28—1—1972 முதல் 31—3—1973 வரையில் பதவி நீட்டிப்புக் கொடுக்கப்பட்டு அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அவர்களுடைய தேவை அத்தியாவசியம் என்று கண்டால் ஹானரரி பேராசிரியராக அவரை வைத்துக்கொள்ளலாம், அப்படி வைத்துக் கொள்வதிலே என்ன சங்கடம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவர்கள் ஏறத் தாழ 25 ஆண்டுக்காலம் அரசாங்க சேவையிலே இருந்த காரணத்தினாலே அப்படி வருவதை அவர்களாக விரும்பவேண்டும். ஆனால் ஹானரரி பேராசிரி யராக வரவேண்டுமானால் பதவி விலகியதிலிருந்து மூன்று ஆண்டுகள் கழித்துத்தான்வரவேண்டும். ராஜினாமா செய்தாலும் 3 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அப்படி நியமிக்கப்படலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : வயதானவர்களுக்குப் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுப்பதால் இளைஞர்கள் மனச் சங்கடத்திற்கு ஆளாகி அவர் களுக்குப் பணியிலே உற்சாகம் குன்றிவிடும் என்பதை அரசு அறியுமா ? எனவே இனிமேலாவது இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கக்கூடிய முறையில் பதவி நீட்டிப்புக் கொடுக்காமல் இருக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திற மைக்கு மதிப்பளிப்பார்கள் என்று கருதுகிறேன். திறமை, அறிவு, ஆற்றல், ஆகிய அனைத்தும் இளமையிலேயே வந்துவிடுவதில்லை. போஸ்ட் கிராஜுவேட் பயில்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரையில், நல்ல அனுபவமும் திறமையும் உள்ள ஆசிரியர்கள் இருந்தால்தவிர, அவர்கள் திறமை பெற்றுக்கொள்ள முடியாது. ஒரு காலத்திலே போஸ்ட் கிராஜுவேட் போன்ற மேல் பட்ட மேல் படிப்புகளை மேல் நாடுகளுக்குச் சென்று படிக்க வேண்டிய நிலைமை இருந்தது. இன்றைக்கு அப்படிப்பட்ட மேல் பட்ட படிப்புகளை நாம் ஏற் படுத்தி வருகிறோம். அகில இந்திய அளவிலேகூட போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட், அப்கிரேடட் இன்ஸ்டிட்யூட் இவைகளிலேயெல்லாம் உள்ளவர் களின் பதவிக் காலத்தை 58 வயது வரையிலேகூட நீடியுங்கள் என்று தெரி வித்து இருக்கிறார்கள். நாம் இன்றியமையாத நிலைமையிலேதான் அதை அனுமதிக்கிறோம்.

திரு. த. சோனையா : மதுரையிலே அரசாங்க மருத்துவக் கல்லூரியிலே பணியாற்றுகின்ற திரு. கபீர் என்பவர் பதவியேற்றதற்குப் பிறகு அங்கே நல்ல சீர்திருத்தங்கள் ஏற்படுத்தியிருப்பதாக மதுரை மக்கள் கருதுகிறார்கள் என்ற காரணத்தினாலும், டாக்டர் ஆசிர்வாதம் என்பவர் அறுவை சிகிச்சை துறையிலே வல்லுநராக இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் பணி தொடர்ந்து கிடைக்கவேண்டுமென்று மதுரை மக்கள் விரும்புகிற காரணத்தினாலும் இன்னும் ஒன்று, இரண்டு ஆண்டுக்காலம் அவர்களுக்குப் பதவி நீட்டிப்புக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே கேள்வி எழுப்பலாமே தவிர, சிபாரிசு செய்யக்கூடாது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியிலே டீன் போன்றவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன. விரிவுரையாளர்களுக்கும் அப்படிப்பட்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றனவா ? அப்படிப்பட்ட சலுகைகளை விரிவுரையாளர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று சென்னையிலிருந்து கோரிக்கை ஏதாவது வந்திருக்கிறதா ? அதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, டீன் பொறுப்பு ஏறத்தாழ துணை இயக்குநர் போன்றது ஆகும். கல்லூரியின் முழு நிர்வாகத்தையும் நடைமுறைகளையும் கவனிப்பதற்கு ஏற்றவர்கள் கிடைப்பதில்லை. அதற்குப் பலர் முன்வருவதில்லை. ஆதலால் அவருக்கு இந்த வாய்ப்பு அளிக்க படுகிறது. ஆனால் விரிவுரையாளர்களைப் பொறுத்தவரையில் அப்படியில்லை, அதிகமானவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பெரிய நிபுணர்கள் மதுரையிலே இருப்பதால் அங்கே ஒரு போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட் ஏற்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா, அரியானாவிலே அப்படிப்பட்ட சிறப்புத் திட்டம் இருக்கிறது, நம்முடைய மாநிலத்திலே அப்படியில்லை. அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, முழு விவரங்களை நான் சொல்ல முடியாவிட்டாலும் போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டுக்கு அவசியமாகும் அப்கிரேடட் பாடப் பிரிவுகள் சென்னை பொது மருத்துவக் கல்லூரியிலே இடம் பெற்றிருக்கிறது. மற்ற சென்னை மருத்துவக் கல்லூரிகளில் அந்த நிலை ஏற்படுத்துவதுபற்றிப் படிப்படியாக யோசிக்கப்படும். மதுரையிலே பட்ட மேல்படிப்புக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.